# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2086/42 - 2018 අගෝස්තු මස 31 වැනි සිකුරාදා - 2018.08.31

*2086/42 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: அம்பகோ/3/4/அ/89.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல.:13/99/ஈ/61.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

நுவரெலியா மாவட்டம் அம்பகமுவ கோரளை பிரதேச செயலக பிரிவின்,ஹற்றன் வடக்கு கிராம அலுவலர் பிரிவின்,ஹற்றன் டிக்ஓயா நகர எல்லைக்குள் அமைந்துள்ள,ஹற்றன் தோட்டம் என்ற கிராமத்தில் அமைந்துள்ள நுவரெலியா நில அளவை அதிபரினால் தயாரிக்கப்பட்ட 2018.02.26 ஆந் திகதிய 3099 வரைபட இலக்கம் நுவரெலியா துண்டு இல. 1 ஆக காட்டப்பட்டுள்ள சுமார் 0.8077 ஹெக்டெயார் கொண்ட காணித்துண்டு:

**01. துண்டு இல. 01 ஆக காட்டப்பட்டுள்ள விஸ்தீரணம்: 0.8077 ஐக் கொண்ட காணித்துண்டின் எல்லைகள்:**

வடக்கு : கால்வாய் ;
கிழக்கு : கால்வாய் மற்றும் ஹற்றன் தோட்டம் ;
தெற்கு : ஹற்றன் தோட்டம் பி. வ. 763 மற்றும் துண்டு இல. 01 மற்றும் ஹற்றன் தோட்டம்;
மேற்கு : ஹட்டன் தோட்டம் மற்றும் கால்வாய்.

உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி :

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு,
இல. 475, கடுவலை வீதி,
பத்தரமுல்லை.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி பி.ப 02.00 மணிக்கு அம்பகமுவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர். டீ. பி. சுமனசேகர,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை.

பிரதேச செயலகம்,
அம்பகமுவ கோரளை,
2018, ஓகத்து 28.

9 - 406